# 50. போற்றிவிண்ணப்பம்

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

**ஐயனே யரசே போற்றி யருமறைப் பொருளே போற்றி**
**துய்யனே துணையே போற்றி தூமணித் திரளே போற்றி**
**மெய்யருள் விளைவே போற்றி வெற்றிவே லேந்து பூவற்**
**கையனே போற்றி யெங்கள் கடவுளே போற்றி போற்றி.**

ஐயனே அரசே போற்றி அருமறைப் பொருளே போற்றி
துய்யனே துணையே போற்றி தூமணித் திரளே போற்றி
மெய் அருள் விளைவே போற்றி வெற்றிவேல் ஏந்து பூவன்
கையனே போற்றி எங்கள் கடவுளே போற்றி போற்றி.

---

1. **துய்யன்** = தூய்மையென்னும் பண்பினடியாகப் பிறந்த பெயர்.

தலைவனே! அரசனே! வணக்கம். அரிய வேதப் பொருளே வணக்கம். தூய்மையானவனே துணையே வணக்கம். தூயமாணிக்கக் கூட்டமே வணக்கம். உண்மை அருள் பயனே வணக்கம். வெற்றிவேலைத் தாங்கும் சிவந்த திருக்கையனே வணக்கம். எங்கள் கடவுளே வணக்கம், வணக்கம். 1

**போற்றுவிண் ணவர்கோன் போற்றி புரிதவத் தொண்டர்க் கின்பம்**
**ஆற்றுநல் லழகன் போற்றி யாடுமம் பரியோன் போற்றி**
**நீற்றினைப் புனைந்த மேனி நிலவருட் குன்றம் போற்றி**
**சீற்றமெம் மேற்கொ ளாவோர் சிவசுப்பிர மணியம் போற்றி.**

*போற்று விண்ணவர்கோன் போற்றி புரிதவத் தொண்டர்க்கு இன்பம்*
*ஆற்றுநல் அழகன் போற்றி ஆடும் அம்பரியோன் போற்றி*
*நீற்றினைப் புனைந்தமேனி நிலவு அருட்குன்றம் போற்றி*
*சீற்றம் எம் மேற்கொளா ஒர் சிவசுப்பிரமணியம் போற்றி.*

காக்கும் தேவலோகத்தார் அரசனான உனக்கு வணக்கம். தவம் செய்யும் தொண்டர்க்கு இன்பம் அளித்தருளும் அழகனுக்கு வணக்கம். நடஞ்செயும் அழகிய மயில்வாகனத்திற்கு வணக்கம். திருநீற்றை அணிந்துள்ள திருமேனி கொண்ட அருள் மலைக்கு வணக்கம். கோபத்தை எம்மீது கொள்ளாத ஒப்பற்ற சிவசுப்பிரமணியனுக்கு வணக்கம். 2

**மணியணி மால்வி ரிஞ்சன் மற்றுள கணங்கள் யாவும்**
**பணியநின் றவனே போற்றி பரமனே போற்றி யன்பர்**
**அணியடி யலரே போற்றி யாக்கிநன் களித்து மாய்க்குங்**
**குணமுடை யத்தா போற்றி குமரவேள் போற்றி போற்றி.**

*மணி அணி மால்விரிஞ்சன் மற்று உள கணங்கள் யாவும்*
*பணிய நின்றவனே போற்றி பரமனே போற்றி அன்பர்*
*அணி அடி அலரே போற்றி ஆக்கி நன்கு அளித்து மாய்க்கும்*
*குணம் உடை அத்தா போற்றி குமரவேள் போற்றி போற்றி.*

மாணிக்க மாலை அணிந்த திருமால், பிரமதேவன், மற்றுமுள்ள பூதகணங்கள் யாவும் வணங்கும்படி நின்றவனே வணக்கம். பரம்பொருளே வணக்கம். அன்பர் குடிகொள்ளும் திருவடி மலரே வணக்கம். படைத்து நன்கு காத்து அழிக்கும் குணமுள்ள கடவுளே வணக்கம். வணக்கம். 3

**போற்றிவந் தாளு முன்றன் பொன்னடிக் கமலம் போற்றி**
**தேற்றுவா ருன்னை யல்லாற் றிக்குவே றில்லை போற்றி**
**மாற்றரும் பிறவிக் காட்டை மடிக்கமெய்ஞ் ஞானத் தீயை**
**ஏற்றமெஃ குடையாய் போற்றி யெங்குறை தவிர்ப்பாய் போற்றி.**

போற்றி வந்து ஆளும் உன்றன் பொன் அடிக் கமலம் போற்றி
தேற்றுவார் உன்னை அல்லால் திக்கு வேறு இல்லை போற்றி
மாற்று அரும் பிறவிக் காட்டை மடிக்க மெய்ஞ்ஞானத் தீயை
ஏற்றும் எஃகு உடையாய் போற்றி எங்குறை தவிர்ப்பாய் போற்றி.

காத்து வந்து அடிமை கொள்ளும் உன்னுடைய அழகிய திருவடித் தாமரைக்கு வணக்கம். என்னைத் தெளிவிப்பார் உன்னையல்லாமல் வேறு துணையில்லை வணக்கம்! மாற்றுவதற்கு அரிய பிறவி என்னும் காட்டை அழிக்க மெய்யறிவு எனும் தீயை ஏற்றுகின்ற வேற்படையுடையவனே வணக்கம்! எம் குறையை நீக்குவோனே வணக்கம். 4

**பாய்நதிக் கிடையோன் வாம பாகமே கொண்டா டன்னைத்**
**தாயென வுவந்தாய் போற்றி தனிப்பரஞ் சுடரே போற்றி**
**வீயிலாப் புத்தேண் மாதை வேட்டுமற் றொருத்திக் கன்று**
**நாயக னானாய் போற்றி நான்மறை முதல்வா போற்றி.**

பாய்நதிக் கிடையோன் வாமபாகமே கொண்டான் தன்னைத்
தாய் என உவந்தாய் போற்றி தனிப்பரஞ் சுடரே போற்றி
வீ இலாப் புத்தேள் மாதை வேட்டு மற்று ஒருத்திக்கு அன்று
நாயகன் ஆனாய் போற்றி நான்மறை முதல்வா போற்றி.

பாயும் கங்கை நதியைத் தாங்கும் சடையோனின் இடப்பாகத்தைக் கொண்டவளைத் தாய் என மகிழ்ந்தவனே வணக்கம். ஒப்பற்ற பேரொளியே வணக்கம்! இறப்பில்லாத தேவர் மகளான தெய்வானையை மணந்து மற்றும் ஒருத்தியான வள்ளியின் கணவனானவனே வணக்கம்! நான்கு வேதங்களின் தலைவா! வணக்கம். 5

**5. வீ** = நீக்கம், சாவு; "வீ நீக்கம் பூப்புட் சாவாம்" எனபது **நகரவெதுகை**

**முதலுமாய் நாப்ப ணாகி முடிவுமாய் நின்றாய் போற்றி**
**சததள பாதா போற்றி சகச்சிர நாமா போற்றி**
**மதிபுனை பரம னார்க்கு மதலையாய்க் குருவாய்த் தேவர்**
**பதியென வுளவேள் போற்றி பரஞ்சுடர்க் கண்ணா போற்றி.**

*முதலுமாய் நாப்பண் ஆகி முடிவுமாய் நின்றாய் போற்றி*
*சததள பாதா போற்றி சகச்சிர நாமா போற்றி*
*மதிபுனை பரமனார்க்கு மதலையாய்க் குருவாய்த் தேவர்*
*பதி என உளவேள் போற்றி பரஞ்சுடர்க் கண்ணா போற்றி.*

முதலுமாய் நடுவுமாகி முடிவும் ஆகி நிற்பவனே வணக்கம்! நூறிதழ்த் தாமரை மலர் போலும் திருவடியுடையவனே வணக்கம்! ஆயிரம் திருநாமங்கள் உள்ளவனே வணக்கம்! பிறைநிலவை அணிந்த கடவுளுக்கு மகனாகவும் குருவாகவும், தேவர்களின் தலைவனாகவும் உள்ள செவ்வேளே வணக்கம்! மேலான அக்கினிக் கண்ணனே வணக்கம்! 6

**கண்ணுமாய்க் கருத்து மாகிக் காணெழி லெந்தை போற்றி**
**விண்ணுமாய் மண்ணு மாகி விளங்கருட் டேவே போற்றி**
**பண்ணவர்க் கருளத் தண்ட பாணியா நின்றாய் போற்றி**
**தண்ணருட் கடலே போற்றி சதுர்முகற் கிறைவா போற்றி.**

*கண்ணுமாய்க் கருத்தும் ஆகிக் காண் எழில் எந்தை போற்றி*
*விண்ணுமாய் மண்ணும் ஆகி விளங்கு அருள் தேவே போற்றி*
*பண்ணவர்க்கு அருளத் தண்ட பாணியாநின்றாய் போற்றி*
*தண் அருள் கடலே போற்றி சதுர் முகற்கு இறைவா போற்றி.*

கண் பார்வையாகியும் நினைப்பாயும் விளங்கும் அழகிய எம் தந்தையே வணக்கம்! தேவலோகமாகவும் பூவுலகமாகவும் விளங்கும் அருள் இறைவனே வணக்கம்! முனிவர்களுக்கு அருள்புரியத் தண்டபாணியாக நின்றவனே வணக்கம்! குளிர்ந்த அருட்கடலே வணக்கம்! நான்முகனுக்கு இறைவனே வணக்கம்! 7

**இறைவனே போற்றி யாதி யெந்தையே போற்றி வேலுக்**
**கிறைவனே போற்றி நீப விணரணி சிவனே போற்றி**
**மறைபுக லரிய வெங்கண் மாதவ மணியே போற்றி**
**குறைவறு நிறைவே போற்றி குளிர்சிவக் கொழுந்தே போற்றி.**

*இறைவனே போற்றி ஆதி எந்தையே போற்றி வேலுக்கு*
*இறைவனே போற்றி நீப இணர் அணி சிவனே போற்றி*
*மறைபுகல் அரிய எங்கண் மாதவ மணியே போற்றி*
*குறைவு அறு நிறைவே போற்றி குளிர்சிவக் கொழுந்தே போற்றி.*

இறைவனே வணக்கம். ஆதியான எம் தந்தையே வணக்கம். வேற்படைக்குத் தலைவனே வணக்கம். கடம்ப மலர் மாலை அணியும் அறுமுகச் சிவனே வணக்கம். வேதங்கள் புகழ்ந்து கூறும் அரிய எங்களுடைய பெருந்தவமுடைய மாணிக்கமே வணக்கம். குறைவில்லா நிறைவே வணக்கம். குளிர்ந்த அருளுடைய சிவனுடைய குமாரனே வணக்கம். 8

**கொழுமையிற் குளிர்மை போற்றி குக்குடக் கொடியாய் போற்றி**
**குழுமிய சிவக ணங்கள் கும்பிடுங் கழலாய் போற்றி**
**தொழுபவர்க் கருள்வோய் போற்றி சுந்தரா போற்றி யென்னை**
**முழுதுமாள் பவனே போற்றி மோனநா யகனே போற்றி.**

*கொழுமையில் குளிர்மை போற்றி குக்குடக் கொடியாய் போற்றி*
*குழுமிய சிவணங்கள் கும்பிடும் கழலாய் போற்றி*
*தொழுபவர்க்கு அருள்வோய் போற்றி சுந்தரா போற்றி என்னை*
*முழுதும் ஆள்பவனே போற்றி மோனநாயகனே போற்றி.*

கொழுமையில் குளிர்ச்சியாய் உள்ளவனே வணக்கம். கோழிக் கொடியானே வணக்கம். கூடியுள்ள சிவகணங்கள் கும்பிடும் திருவடியுடையவனே வணக்கம். வணங்குவோர்க்கு அருள்பவனே வணக்கம். அழகனே வணக்கம். என்னை முழுவதுமாக அடிமை கொண்டுள்ளவனே வணக்கம். மௌனமான தலைவனே வணக்கம். 9

**நாயக மானார்க் கெல்லா நாயக மானாய் போற்றி**
**தாயென வருவாய் போற்றி சண்முகத் தரசே போற்றி**
**தீயரிப் பெயரோற் கன்று தெய்வமுங் குருவு மான**
**நீயெனைக் கலந்தாள் போற்றி நித்தனே போற்றி போற்றி.**

*நாயகம் ஆனார்க்கு எல்லாம் நாயகம் ஆனாய் போற்றி*
*தாய் என வருவாய் போற்றி சண்முகத்து அரசே போற்றி*
*தீ அரிப் பெயரோர்க்கு அன்று தெய்வமும் குருவும் ஆன*
*நீ எனைக் கலந்து ஆள் போற்றி நித்தனே போற்றி போற்றி*

தலைமையானவர்க்கெல்லாம் தலைமையுடையவனே வணக்கம். தாய்போல் வருபவனே வணக்கம். சண்முகத்து அரசே வணக்கம். நெருப்புமலைப் பெயருடையவரான அருணகிரிநாதருக்கு அன்று தெய்வமாகவும் ஞானோபதேசம் செய்யும் குருவுமாகவும் உள்ள நீ, என்னை இரண்டறக் கலந்து அடிமை கொள்வாயாக வணக்கம். நித்தனே வணக்கம். வணக்கம்.